**செய்தி வெளியீடு எண்: 427** **நாள்: 29.02.2024**

**<u>செய்தி வெளியீடு</u>**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம் மூலம் பல்வேறு விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக, 02.03.2024 அன்று மிதிவண்டி பேரணி இவ்வலுவலகம் சார்பாக நடைபெற உள்ளது. இப்பேரணியானது சென்னை கலங்கரை விளக்கத்தில் இருந்து பல்லாவரம் அலுவலர் குடியிருப்பு வரை 2 மணி நேரம் நடைபெறவுள்ளது.

இப்பேரணியை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி கொடியசைத்து தொடங்கி வைப்பார். இந்த தேர்தல் பேரணி மூலம், வாக்காளர்கள் தேர்தல் செயல்பாட்டில் பங்கேற்பதன் முக்கியத்துவம் குறித்து அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். இம்மிதிவண்டி பேரணியானது கீழ்காணும் கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது:–

தமிழ் : “தேர்தல் பருவம் – தேசத்தின் பெருமிதம்"
English : “Elections the biggest festival and Pride of the nation”

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in